# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1816 - 2013 ජූනි මස 21 වැනි සිකුරාදා - 2013.06.21

*1816 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1578 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1581 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 1583 |


**கவனிக்க.-** (i) ஜயந்திபுர நலன்புரிச்சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2011, மே மாதம் 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) பிய தசுன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2011, மே மாதம் 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) சுவாபிமானி தஹம் சவிய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2011, மே மாதம் 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, யூலை மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, யூன் மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் — வெற்றிடம்

திருத்தம்

**ஹற்றன் - டிக்கோயா நகர சபை**

26.04.2013 ஆந் திகதிய 1808 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் IV (ஆ) உள்ளூராட்சி நிறுவனங்களின் வெற்றிடங்களின் கீழ் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில், கல்வித் தகைமையானது கீழ்க்காணும் வகையில் திருத்தப்படல் வேண்டும் என்பதை அறியத்தருகின்றேன். அதன் பிரகாரம் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களில் கல்வித்தகைமைகள் பரிசீலிக்கப்படும்.

| தொடர். இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் | தேவையான கல்வி தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 02 | லொறி/ டிரக்டர் சாரதி | 01 | ரூபா 12,470-10×130-10×145-10×160-12×170- ரூபா 18,860 (அ.நி.சு 6/2006 (IV) PL 3-2006 (A) சம்பள அளவின் 1 ஆம் நிலை ஆரம்ப சம்பள நிலையாகக் கருதப்படும். (4 ஆவது சம்பள நிலையைக் கடக்கும் முன் வினைத் திறமைகாண் தடை தாண்டல் உண்டு.) | க.பொ.த.(சா.த) பரீட்சையில் அல்லது தேசிய கல்விப் பொது தராதர (சா.த) பரீட்சையில் தமிழ் அல்லது சிங்கள மொழியுடன் குறைந்தது இரு பாடங்களில் திறமை சித்தி உட்பட 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். மோட்டார் வாகனபோக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட நிபுணத்துவ சான்றிதழ் மற்றும் வாகன சாரதியாக 03 வருட அனுபவம் இருத்தல் வேண்டும். (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.) ஆகக் குறைந்தது 5 அடி உயரம் இருத்தல் வேண்டும். சிறந்த கண் பார்வை இருத்தல் வேண்டும். நெடுஞ்சாலை சட்ட விதிக்கோவை பற்றிய சிறந்த அறிவு இருத்தல் வேண்டும். |
| 03 | வேலை பிரிவு தொழிலாளிகள் | 02 | ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17, 600 (அ.நி.சு. 6/2006 (IV) PL 1-2006 (A) சம்பள அளவின் 1 ஆம் நிலை ஆரம்ப சம்பள நிலையாகக் கருதப்படும். (4 ஆவது சம்பள நிலையைக் கடக்கும் முன் வினைத் திறமை காண் தடை தாண்டல் உண்டு.) | க.பொ.த. (சா.த) பரீட்சையில் அல்லது தேசிய கல்வி பொது தராதர (சா.த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத தமிழ் அல்லது சிங்கள மொழியுடன் குறைந்தது 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |

கே. ஏ. பீ. குலசூரிய,
செயலாளர்.
ஹற்றன் டிக்கோயா நகர சபை.

நகர சபை அலுவலகம்,
ஹற்றன் டிக்கோயா.

6-363

## திருத்தம்

### உடுநுவர பிரதேச சபை

மத்திய மாகாண அரச சேவையின் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்

2013.05.17 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் வீதித் தொழிலாளர் கல்வித் தகைமைகள் திருத்தி அமைக்கப்பட்டு இவ்வர்த்தமானி அறிவித்தல் மீண்டும் பிரசுரிக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| 06 | வீதித் தொழிலாளர் (தரம் III) | 05 | ரூ. 11,730 -10×120-10×130 10×145-12×160-ரூ.17,600 பொ.நி.சு 06/2006 (IV)PL 12006 A சம்பள அளவு 01 ஆவது ஆரம்ப சம்பளப் படியாகக் கருதப்படும். (நான்காவது சம்பளப் படிக்கு வரமுன்னர் தகுதி காண் தடை உண்டு.) | க.பொ.த. (சா.த) பரீட்சையில் அல்லது தேசிய கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண தர) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது சிங்களம் தமிழ் மொழியுடன் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

2013.06.28 ஆந் திகதி விண்ணப்பப்படிவம் பெற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியாக திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

ஆர். எச். எம். ஐ. மெனிகே,
செயலாளர்,
உடுநுவர பிரதேச சபை.

உடுநுவர பிரதேச சபை அலுவலகம்,
கெலிஓயா.

6-472

---

### நீர்கொழும்பு மாநகர சபை

மேல் மாகாண அரச சேவையில் பதவிகள் வெற்றிடம்

நீர்கொழும்பு மாநகர சபையில் தற்போது வெற்றிடங்களாயுள்ள பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் பொருட்டு மேல் மாகாண மாகாண சபையினுள் நிரந்தர வசிப்பாளர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தினை பூர்த்திசெய்து 21.07.2013 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "மாநகர ஆணையாளர், நீர்கொழும்பு மாநகர சபை, நீர்கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

தற்போது அரச/மாகாண அரசாங்க சேவையிலுள்ளோர் தங்கள் விண்ணப்பங்களை தாங்கள் சேவையாற்றும் திணைக்கள தலைவர்மூலம் அனுப்புதல் வேண்டும்.

| தொடர். இல. | பதவி | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01 | விற்பனை நிலைய நிருவாகத்தர் தரம் II | 01 | எம்என் 1-2006ஏ ஆரம்ப சம்பள நிலை ரூபா 13,120 நான்காவது படிநிலைக்கு முன் வினைத் திறமைகாண் தடை உண்டு. | (குறிப்பு 01 ஐப் பார்க்கவும்) |

**குறிப்பு 1.- விற்பனை நிலைய நிருவாகத்தர் பதவிக்காக பூர்த்திசெய்திருக்க வேண்டிய கல்வித் தகைமைகள் :**

க. பொ. த. (சா. த.) பத்திரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது கணிதம், சிங்களம்/தமிழ் மொழி உட்பட 04 பாடங்களில் திறமை சித்திகளுட்பட 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

சிறந்த தனிப்பட்ட குணத் தோற்றம் கொண்டவராக இருப்பதுடன் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நன்கு கதைக்கக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

**சேவை நிபந்தனைகளும் நியதிகளும்.-**

(அ) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.
(ஆ) விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு அங்கத்துவப் பணம் செலுத்துதல் வேண்டும்.
(இ) இப்பதவிக்கு நியமனம் பெற்றோர் 3 வருட கால நன்னடத்தைக் காலத்திற்கு உட்பட்டவராவர். இக்காலத்திற்குள் வேலை. வருகை மற்றும் நடத்தை திருப்திகரமானதாக இருக்குமாயின், நன்னடத்தை கால இறுதியில் நிரந்தரமாக்கப்படுவர். ஏற்கனவே அரச சேவையில்/மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி வகிப்போர் 1 வருட பதிற் கடமையாற்றும் பதவியில் வைக்கப்படுவர்.

**ஏனைய பொது நிபந்தனைகள்.**- (1) விண்ணப்பம் கோரும் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்குக் மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ளோருக்கு இவ்வயதெல்லை ஏற்புடைத்தாகாது.)

(2) விண்ணப்பதாரிகள் பரம்பரையாகவோ அல்லது பதிவின் மூலமாகவோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(3) விண்ணப்பதாரிகள் சிறந்த நடத்தையும் நல்ல தேகாரோக்கியமுமுடையவராகவிருத்தல் வேண்டும் ; இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் ஒரு மாத காலத்திற்குள் அரச வைத்தியர் ஒருவரினால் நடாத்தப்படும் வைத்திய பரிசோதனைக்கு தோற்றுதல் வேண்டும் என்பதுடன் அப்பரிசோதனையில் உடல்நலம் குன்றியவராக தெரியவரின் நியமனம் இரத்துச் செய்யப்படும் ;

(4) தண்டச் சட்டக்கோவையின்கீழ் நீதிமன்றில் தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது ;

(5) விண்ணப்பம் கோரும் திகதியன்று தொடர்ச்சியாக மூன்று வருட கால மேல் மாகாணத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

(6) அரச/மாகாண அரச சேவையில் வெளியேற்றப்பட்டவராக இருத்தல் கூடாது என்பதுடன் மாகாண அரச நிருவாக சுற்றறிக்கை இல. 44/90 இன் கீழ் ஓய்வுபெற்றவராகவோ இருத்தலும் கூடாது.

**ஆட்சேர்த்துக்கொள்ளும் விதம்.**- விற்பனை நிலைய நிருவாகத்தர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவோர் பொது நிருவாக சுற்றறிக்கை இல. 15/90 இற்கமைய பொது விவேகப் பரீட்சைக்கான 1 1/2 மணித்தியால வினாப்பத்திரம் மற்றும் பொது அறிவு பரீட்சைக்கான 1 மணித்தியால வினாப்பத்திரத்திற்கு தோற்றி சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மாநகர ஆணையாளர்,
நீர்கொழும்பு மாநகர சபை.

நீர்கொழும்பு மாநகர சபை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீர்கொழும்பு மாநகர சபை**

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

................................ பதவி

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :----.
3. தேசிய அடையாள அட்டை இல. :- | | | | | | | | | | |
4. நிரந்தரமாக விலாசம் :----.
5. தபால் விலாசம் :----.
6. நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் :----.
7. நிரந்தரமாக வசிக்கும் பிரதேச செயலாளர் பிரிவு :----.
8. நிரந்தரமாக வசிக்கும் உள்ளூராட்சி நிறுவனத்திற்கான அதிகார பிரதேசம் :----.
9. பிறந்த திகதி :-
   ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |
10. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :-
   வருடங்கள் : | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

11. கல்வித் தகைமைகள் :----.

12. அனுபவங்கள் :----.

13. தொழில்சார் தகைமைகள் :----.

14. ஏனைய தகைமைகள் :----.

15. நீங்கள் நீதிமன்றினால் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீரா? :----.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானதும் பிழையற்றதும் என வெளிப்படுத்துகிறேன். இங்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் நிபந்தனைகளுக்கமைய என்னால் தரப்பட்டுள்ள பொய்யான தகவல்கள் நிரூபிக்கப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னராயின் தகைமையற்றவனாவேன் எனவும் நியமனத்தின் பின்னராயின் பதவி நீக்கத்திற்கு ஆட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரி தற்போது அரச சேவையில் பதவி வகிப்பாராயின் திணைக்கள/நிறுவன தலைவரின் சான்றிதழ்**

விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ................................................................ அவர்கள் தற்போது இத்திணைக்களத்தில்/ நிறுவனத்தில் .................................. ஆக சேவையாற்றுகிறார். மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு நியமிக்கப்படுவாராயின், அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எவ்விதத்திலும் சட்டத்திற்குட்பட்ட தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகவில்லை என இத்தால் சான்றுபடுத்துவதுடன் விண்ணப்பப்படிவத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கிறேன்.

-----,
திணைக்கள தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.

பதவி :----.

திணைக்களம்/நிறுவனம் :----.

(பதவி முத்திரை இடவும்)

திகதி :----.

6-565

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## அரநாயக்க பிரதேச சபை

1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 14 மற்றும் 24(2) உறுப்புரையின்கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24 ஆவது உறுப்புரையின் பிரகாரம் சபரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தின் அரநாயக்க பிரதேச சபையால் இங்கு இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாதைகள்/வீதிகள் அரநாயக்க பிரதேச சபைக்குரிய பாதைகள் /வீதிகள் எனப் பிரகடனப்படுத்தி இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

தற்போது பிரதேச சபையால் அளந்து அடையாளமிடப்பட்டுள்ள இப்பாதைகள் /வீதிகள் பற்றி குறித்த காணி உரிமையாளராக உரிமை பாராட்டுவோரால் ஏதாவது எதிர்ப்புகள் தெரிவிப்பதாயின் இவ்வறிவித்தல் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்கு தங்களது உரிமையை உறுதிப்படுத்துவதற்கு 1987 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24 (2) ஆவது உறுப்புரையின் பிரகாரம் செயற்படுமாறு இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

இக்கால எல்லைக்குள் யாதாயினுமொரு எதிர்ப்பு முன்வைக்கப்படாவிடின் அட்டவணையில் குறிப்பிடப்படும் பாதைகள்/வீதிகள் அரநாயக்க பிரதேச சபைக்குச் சொந்தமான பாதைகள் /வீதிகளாக ஏற்றுக்கொண்டு நிர்வகிக்கப்படும் எனவும், பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக இத்துடன் பகிரங்க அறிவித்தல் விடுக்கின்றேன்.

ஆர்.தினேஸ் குணரத்ன,
தலைவர்,
அரநாயக்கபிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அரநாயக்க,
2013.05.28.

| | |
|---|---|
| பாதையின் பெயர் | : விஹாரவத்த பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : அரவ்பொலவில் இருந்து மாவனல்லை பாதையில் மெதகெதரவத்த கும்புர காணியில் ஆரம்பித்து ஹிரிவல் அம்பேஹேன காணிக்கு அருகில் கட்டுகஹ பாதையுடன் இணையும் |
| கிராம அதிகாரிப் பிரிவு | : கம்மன்னாகொட |
| பாதையின் நீளம் | : 500 மீற்றர் அகலம் : 10 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடப்பக்கமாகவுள்ள காணியின் பெயர்களும் காணி உரிமையாளர்களின் பெயர்களும்

| | | |
|---|---|---|
| 1 | வண. மாவெல சுமங்கல | பன்சலேவத்த |
| 2 | திரு. பீ. வீ. செனவிரத்ன | பஹலவத்த |
| 3 | திரு. யூ. ஜீ. பொடிஅப்புஹாமி மற்றும் திரு. யூ. ஜீ. மத்தும பண்டார | ஹிரிவல்அம்பே ஹேன |
| 4 | திரு. கே. டி. ஜயரத்ன | ஹிரிவல்அம்பே ஹேன |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலப்பக்கமாகவுள்ள காணியின் பெயர்களும் காணி உரிமையாளர்களின் பெயர்களும்

| | | |
|---|---|---|
| 1 | வண. மாவெல சுமங்கல | மெதகெதரவத்த கும்புர |
| 2 | திரு. யூ.ஜீ. தஸநாயக | விஹார உடஹவத்த |
| 3 | திரு.யூ.ஜீ. பொடிஅப்புஹாமி மற்றும் திருமதி யூ.ஜீ. பேபி நோனா | விஹார உடஹவத்த |
| 4 | திரு. பீ.வீ. செனவிரத்ன | பஹலவத்த |
| 5 | திரு. பீ.வீ. வசந்த அமரசிங்ஹ | பஹலவத்த |

உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. எச். எம். ஆர். டீ. கே. ஹேரத் அவர்களின் 2009.08.01 ஆம் திகதிய 6131 ஆம் இலக்க பட வரைபுத்திட்டத்தின் பிரகாரம் ஆகும்.

6-384

# நானாவித அறிவித்தல்கள்

## உக்குவளை பிரதேச சபை

வியாபாரக் கட்டணம் - 2013

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை யாப்பில் இல. 152 ஆம் பிரிவின்படி கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில், வியாபாரம் தொடர்பான வரி 2013 ஆம் வருடத்திற்கு அறவிடுவதற்கு 2013.01.15 ஆந் திகதி ( தீர்மானத்தின்படி 04.04.02 ஆம் கட்டளை சட்டப்படி) அன்று நடாத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது என்பதை பொதுமக்களுக்கு அறியத்தருகிறேன்.

சமந்த தர்மசேன,
தலைவர்
உக்குவளை பிரதேசசபை.

### அட்டவணை

| வியாபாரத்தின் தன்மை | ரூபா ச. |
|---|---|
| தொலைபேசி சேவை வழங்குவதற்கான சமிக்ஞை கோபுரம்/நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கான கட்டணம் | 3,000 0 |
| தொலைபேசி சேவை கோபுரம் அமைக்கப்பட்டுள்ள பிரதேச சூழல் மற்றும் ஏனைய அபிவிருத்திகளுக்கான கட்டணம் (மேலும் அரசினால் விதிக்கப்படும் வரி அறவிடப்படும்) | 25,000 0 |

6-364

## மாலிம்பட பிரதேச சபை

கழிவகற்றல் கட்டணம் அறவிடல் - 2013

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைக் கட்டளைச் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் மற்றும் 126 (ix) ஆ பிரிவின் பிரகாரம் கிடைக்கப்பட்ட அதிகாரத்தின்படி மாலிம்படை பிரதேச சபையினால் 2008, திசெம்பர் 23 ஆந் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுத் துணைவிதியின்படி கழிவகற்றல் சேவை மூலம் சேவை வழங்கப்படும் தஹம் மாவத்தையின், மெஜஸ்டிக் கோட் கிராமம், மாலிகாதன்ன கிராமத்தின் ஆரம்ப பகுதி, அலஸ்வத்த கிராமம், கொலேஜ்வீவ் கிராமம், மெதகொட உட்பட கழிவுகள் ஒன்று சேர்த்தும் விஷேட கருத்திட்டத்திற்கு பிரவேசிக்க விரும்பும் பிரதேசங்களில் மற்றும் வீதிகளில் வதியும் வரிமதிப்புப் பணம் அறவிடப்படாத வீடுகளிலிருந்து கழிவகற்றல் கட்டணமாக ரூபா 75.00 உம், வியாபார நிலையங்களிலிருந்து கழிவகற்றல் கட்டணமாக ரூபா 100.00 உம், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அறவிடப்படவென 2012, திசெம்பர் 28 ஆந் திகதி மாலிம்படை பிரதேச சபையின் மாதாந்த கூட்டத்தின் தீர்மான இலக்கம் 7 : 1 இன் கீழ் தீர்மானித்துள்ளதாக இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

சோமசிறி வீரமன்,
தலைவர்,
மாலிம்படை பிரதேச சபை.

6-574

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.